## புகை-அற்ற ஒன்டேரியோ சட்டம் 2005
### எவ்வாறு இச்சட்டம் பாதிக்கிறது : பழங்குடி (அபாரிஜினல்) மக்களை

## அடிப்படைகள்

- புகை-அற்ற ஒன்டேரியோ சட்டம் (SFOA) மே 31, 2006 அன்று அமலுக்கு வருகிறது.
- இச்சட்டம் ஒன்டேரியோவின் தொழிலாளர்களையும், பொது மக்களையும் மறைமுகப் புகையின் (Second-hand smoke) இடர்களிலிருந்து பாதுகாக்கும் பொருட்டு, உள்ளடக்கப்பட்ட வேலையிடங்கள் மற்றும் உள்ளடக்கப்பட்ட பொது இடங்களில் புகை பிடித்தலை தடை செய்கிறது.

## விலக்கு - பழங்குடி மக்கள்

ஒரு உள்ளடக்கப் பட்ட வேலையிடம் அல்லது உள்ளடக்கப் பட்ட பொது இடத்தில் புகை பிடித்தல் தடை செய்யப் பட்டிருந்தாலும், பாரம்பரிய பழங்குடி கலாச்சார அல்லது இறை வழிபாட்டுத் தேவைகளுக்கென, புகையிலையை உபயோகிக்கும் உரிமை, ஒரு பழங்குடி மனிதருக்கு உண்டு.

மருத்துவமனைகள் (அரசு மற்றும் தனியார்), நீண்ட கால பராமரிப்பு இல்லங்கள் மற்றும் மன நோய் மருத்துவ மனைகளிலுள்ள பழங்குடியினருக்கு, பாரம்பரிய கலாச்சார அல்லது இறை வழிபாட்டுத் தேவைகளுக்கென புகையிலையை உபயோகிக்கும் பொருட்டு கட்டிடத்துக்குள் ஒரு பகுதியைப் பெறும் உரிமை உண்டு.

## இயக்குபவரின் கடமைப் பொறுப்புகள்

- பழங்குடி வாசி ஒருவரின் வேண்டுகோளின் பேரில், பாரம்பரிய கலாச்சார அல்லது இறை வழிபாட்டுத் தேவைகளுக்கென புகையிலையை உபயோகிக்கும் பொருட்டு, குடியிருப்பவருக்காக கட்டிடத்திக்குள் ஒரு பகுதியை இயக்குபவர் ஒதுக்கிவைக்க வேண்டும்.
- மற்ற எந்த கட்டுப்படுத்தப்பட்ட புகை பிடிப்பிடம் என நியமிக்கப்பட்ட பகுதியிலிருந்து இப்பகுதி தனியாக இருக்க வேண்டும்.

## அமலாக்கம்

இக்குறிப்பிட்ட சட்டத்தை அமல்படுத்துவதால் எழக்கூடிய அலாதியான பிரச்சினைகளை அரசாங்கம் அறிந்துள்ளது. பர்ச்ட் நேஷன்ஸ் (பழங்குடி) சமூகங்களை ஈடுபடுத்தி அபாரிஜினல் ரிசர்வில் (காப்பொதுக்கம்) மறைமுக-புகைபிடித்தலுக்கு ஆளாவதை குறைக்கவும், வர்த்தகப் புகையிலை பெருமளவு உபயோகப் படுத்தப்படும் பிரச்சினையை தீர்க்கவும் கலாச்சார ரீதியில் பொறுத்தமான புகையிலைக்கல்வி, இடை நிறுத்தம் மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் மூலம் சமாளிக்கும் பணிக்கெனவும் அரசு பொறுப்பேற்றுள்ளது.

## அபராதங்கள்

சட்டத்தின் இப்பிரிவின் கீழ், குற்றம் சாட்டப்பட்டு தண்டிக்கப்படும் ஒரு நபருக்கு அபராதம் விதிக்கப்படக்கூடும். சட்டத்தின் இப்பிரிவின் கீழ் குற்றம் சாட்டப்பட்டு தண்டிக்கப்படும் ஏதாவது ஒரு கம்பனிகூட அபராதம் செலுத்த வேண்டிவரும்.

இந்த தகவல் தாளை ஒரு விரைவு நோக்கீட்டு உபயோகத்திற்கென மட்டுமே பயன் படுத்த பரிந்துரைக்கப் படுகிறது. கூடுதல் தகவலுக்கென, தயவு செய்து உங்கள் உள்ளூர் அரசு சுகாதாரப் பிரிவைத் தொடர்பு கொள்ளவும்.

கட்டணமற்ற தொலைபேசி எண்களில் தொடர்பு கொண்டும் நீங்கள் தகவல் பெறலாம்.

- **INFOline** 1-866-396-1760
- **TTY** 1-800-387-5559

வேலை நேரம் : திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை.

புகை அற்ற ஒன்டேரியோ சட்டம் பற்றிய கூடுதல் தகவலுக்கென, தயவு செய்து சுகாதார முன்னேற்றத்திற்கான ஒன்டேரியோ அமைச்சக வலையகத்திற்கு வருகை தாருங்கள்: http://www.mhp.gov.on.ca/english/health/smoke_free/legislation.asp.

மே 2006



Ontario